நியூ சவுத் வேல்ஸ் சுகாதாரத்துறை

தட்டம்மை (Measles), அம்மைக்கட்டு (Mumps) மற்றும் மணல்வாரி (Rubella) (MMR) தடுப்பூசி

பெற்றோர் தகவல் தாள்

தேசிய நோய்த்தடுப்புத் திட்டத்தின் (NIP) கீழ் சில தடுப்பூசிகளை ஆஸ்திரேலிய அரசாங்கம் இலவசமாக வழங்குகிறது.

கே. தட்டம்மை (Measles), அம்மைக்கட்டு (Mumps) மற்றும் மணல்வாரி (Rubella) என்றால் என்ன?

தட்டம்மை (Measles) என்பது காய்ச்சல், இருமல் மற்றும் வேனல் கட்டி போன்றவற்றை ஏற்படுத்தும் கடுமையான தொற்றுநோய்க் கிருமியாகும். இது நுரையீரல் வீக்கம் (pneumonia), மூளை வீக்கம் மற்றும் நிரந்தரமான மூளைப் பாதிப்பு போன்ற தீவிர சிக்கல்களுக்கு வழிவகுக்கும். தட்டம்மை (Measles) அரிதாக மரணத்தை விளைவிக்கும்.

அம்மைக்கட்டு (Mumps) என்பது பரவக்கூடிய ஒரு வைரஸ் நோய்த்தொற்றாகும், இது கழுத்துச் சுரப்பிகள் வீக்கத்தையும், காய்ச்சலையும் ஏற்படுத்துகிறது. சுமார் 10% நோயாளிகளுக்கு, இது மூளை வீக்கத்திற்கு வழிவகுக்கக்கூடும். 15-30% ஆண்களுக்குப் பருவமடைந்த காலத்திற்குப் பின், இது வீக்கத்தையும் வலியையும் ஏற்படுத்தக்கூடும். கர்ப்பத்தின் ஆரம்பகாலத்தில் ஏற்படும் தொற்றால் கருச்சிதைவு ஏற்படலாம்.

மணல்வாரி (Rubella) (ஜெர்மன் தட்டம்மை) என்பது வேனல் கட்டி, காய்ச்சல் மற்றும் சுரப்பிகள் வீக்கத்தை ஏற்படுத்தும் ஒரு வைரஸ் ஆகும். கர்ப்பிணிப் பெண் ஒருவர் மணல்வாரி (Rubella) நோயால் பாதிக்கப்பட்டால், அவளுடைய குழந்தைக்குக் காது கேளாமை, பார்வை இழப்பு, அறிவுசார் இயலாமை அல்லது இதயப் பிரச்சினைகள் போன்ற கடுமையான பிறப்புக் குறைபாடுகள் ஏற்படலாம்.

கே. தட்டம்மை (Measles), அம்மைக்கட்டு (Mumps) மற்றும் மணல்வாரி (Rubella) எவ்வாறு பரவுகிறது?

இந்த வைரஸ்கள் இருமல் மற்றும் தும்மல் மூலம் பரவுகிறது. தட்டம்மை (Measles) என்பது குறிப்பாகத் தொற்றக்கூடியது. பாதிக்கப்பட்ட நபருடன் ஒரே அறையில் இருப்பதன் மூலம் வைரஸ் பரவக்கூடும்.

கே. தடுப்பூசிகள் எப்படி வேலை செய்கின்றன?

நோயெதிர்ப்புச் சக்தியானது தொற்றுநோய்களை எதிர்த்துப் போராட தடுப்பூசிகள் உதவுகின்றன. தடுப்பூசி போடப்பட்ட நபர் இந்த வைரசால் பாதிக்கப்பட்டால், அவரது உடல் நோயை சிறப்பாக எதிர்த்துப் போராட முடியும் அல்லது அதன் தீவிரத்தை குறைக்க முடியும்.

கே. MMR தடுப்பூசி எவ்வளவு சக்தியுள்ளதாக இருக்கிறது?

தட்டம்மை (Measles), அம்மைக்கட்டு (Mumps) மற்றும் மணல்வாரி (Rubella) ஆகியவற்றிலிருந்து பாதுகாப்பதில் MMR தடுப்பூசி மிகவும் சக்தியுள்ளதாக இருக்கிறது.

கே. எத்தனை டோஸ்கள் தேவைப்படும்?

ஏற்கனவே இரண்டு டோஸ்கள் போடப்பட்டிருந்தாலன்றி தற்போது MMR தடுப்பூசியின் இரண்டு டோஸ்கள் தேவைப்படும்.

கே. யாருக்கு தடுப்பூசி போடக் கூடாது?

MMR தடுப்பூசியைப் பின்வருபவர்களுக்குப் போட வேண்டாம்:

- **முந்தைய டோஸில் அல்லது தடுப்பூசியில் உள்ள மூலப்பொருளுக்குக் கடுமையான ஒவ்வாமை எதிர்வினை (anaphylaxis) கொண்டுள்ளவர்கள்**
- **கர்ப்பமாக இருந்தால் (தடுப்பூசி போட்ட 28 நாட்களுக்குக் கர்ப்பம் தரித்தலும் தவிர்க்கப்படவேண்டும்)**
- **கடந்த 4 வாரங்களில் உயிரித் தடுப்பூசி (சின்னம்மை, BCG அல்லது மஞ்சள் காய்ச்சல் போன்றவை) போட்டிருப்பவர்கள்**
- **கடந்த ஆண்டில் இரத்தம் ஏற்றப்பட்டிருப்பவர்கள் அல்லது இம்யூனோகுளோபுலின் (immunoglobulin) ஊசி போட்டிருப்பவர்கள்**
- **பலவீனமான நோயெதிர்ப்புச் சக்தி உடையவர்கள், இதில் பின்வருவோர் அடங்கும்:**
  - எச்.ஐ.வி/எய்ட்ஸ் வியாதி உடையவர்கள்
  - வாய்வழி கார்டிகோஸ்டீராய்டுகளை (corticosteroids) அதிக அளவு உட்கொள்வோர்
  - வலுவான நோயெதிர்ப்புத் தடுப்பு சிகிச்சைகள், கதிர்வீச்சு அல்லது எக்ஸ்ரே சிகிச்சையில் உள்ளவர்கள்
  - நிணநீர்ப் புற்றுநோய் (lymphoma) அல்லது இரத்தப் புற்றுநோய் (leukaemia) அல்லது ஹாட்ஜ்கின் (Hodgkin) நோய் போன்ற சில புற்றுநோய்கள் உள்ளவர்கள்.

கே. MMR தடுப்பூசியில் என்ன இருக்கிறது?

தடுப்பூசியில் 'லாக்டோஸ்' (lactose), 'நியோமைசின்' (neomycin), 'சார்பிடோல்' (sorbitol) மற்றும் 'மன்னிடோல்' (mannitol} ஆகியவை சிறிய அளவில் உள்ளன. இந்த மூலப்பொருட்கள் தடுப்பூசி வேலை செய்ய அல்லது பாதுகாக்க உதவுகின்றன.

கே. தடுப்பூசிகள் எவ்வளவு பாதுகாப்பானவை?

ஆஸ்திரேலியாவிலுள்ள தடுப்பூசிகள் மிகவும் பாதுகாப்பானவை. சிகிச்சைப் பொருட்கள் நிர்வாகத்தின் (TGA) ஒப்புதலுக்கு முன் அவை கடுமையான பாதுகாப்புச் சோதனைகளைக் கடக்க வேண்டும். பயன்பாட்டிற்குப் பிறகு தடுப்பூசிப் பாதுகாப்பையும் TGA கண்காணிக்கிறது.

கே. MMR தடுப்பூசியின் பக்க விளைவுகள் என்ன?

MMR தடுப்பூசி பாதுகாப்பானது மற்றும் உடல் நன்கு தாங்கிக் கொள்ளக்கூடியது. பொதுவான பக்க விளைவுகள் வீரியம் குறைந்தவை மற்றும் அவற்றில் பின்வருவன அடங்கும்:

- **சுகவீனம்**
- **காய்ச்சல்**
- **தொற்று அல்லாத வேனல் கட்டி (தடுப்பூசி போட்ட 5-12 நாட்களுக்குப் பிறகு தோன்றலாம்).**

அரிதான பக்க விளைவுகளில் பின்வருவன இருக்கலாம்:

- **தற்காலிக வீங்கிய நிணநீர் கணுக்கள்**
- **மூட்டு வலி**
- **சிராய்ப்பு அல்லது இரத்தப்போக்கு அதிகரிக்கும் அபாயம்.**

அனாஃபைலாக்ஸிஸ் (anaphylaxis) போன்ற தீவிர பக்க விளைவுகள் மிகவும் அரிதானவை.

மேலும் தகவல்களுக்கு, health.nsw.gov.au/schoolvaccination என்ற இணையதளத்தில் உள்ள நுகர்வோர் மருத்துவத் தகவலைப் (CMI) பார்க்கவும். பக்க விளைவுகள் பற்றிய கவலை உங்களுக்கிருந்தால், உங்கள் பொது மருத்துவரைத் தொடர்பு கொள்ளவும்.

கே. அனாஃபைலாக்ஸிஸ் (anaphylaxis) என்றால் என்ன?

அனாஃபைலாக்ஸிஸ் (anaphylaxis) என்பது மிகவும் அரிதான ஆனால் கடுமையான ஒவ்வாமை எதிர்வினையாகும். அது சுயநினைவை இழக்க வைக்கும் அல்லது விரைவாக சிகிச்சையளிக்கப்படாத பட்சத்தில், மரணத்தை ஏற்படுத்தும். நோய்த்தடுப்பு வழங்குநர்கள் அனாஃபைலாக்ஸிஸை (anaphylaxis) நிர்வகிக்கப் பயிற்சி பெற்றுள்ளனர்.